1974 மார்ச் 11]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) எதுமில்லே.

* 357 வின—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரம், 28-வது வார்டு, காங்கயம்பாளையம்புதூரில் உள்ள அரிசன மக்களுக்கு வீட்டு மனைக்கு நிலம் கையகப்படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பிரிவு 4(1) முன் மொழிவு மாவட்ட ஆட்சியாளரின் பரிசீலனையில் உள்ளது.

[முற்பகல் 9-30]

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்கு மனைகள் கொடுப்பதற்கு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இன்று போகிற நிலைமையைப் பார்த்தால் ஆமை வேகத்திலே போய்க் கொண்டிருக்கிறது, அதை முயல் வேகத்திலே போகச் செய்கின்ற நிலைமையில் இல்லாமல் இலாக்கா ரொம்பப் பின்தங்கியிருக்கிறது. ஆகவே அந்த நிலைமையை மாற்றி ஒரு ஆண்டுக் காலத்திற்குள்ளாகவே மனைகளை வழங்கச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மனை வழங்குகின்ற பொழுது இடம் அரசாங்கத்தினுடைய நிலமாக இருந்தால் தாமதம் இல்லாமல் வழங்கலாம், ஆனால் தனியார்களுடைய நிலமாக இருந்தால் அவற்றை ஆர்ஜிதம் செய்துதான் கொடுக்க வேண்டியிருக்கிறது, அந்த நிலைமையில் நிலச் சொந்தக்காரர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள், அவர்கள் வழக்கு மன்றங்களுக்குக்கூடச் செல்கிறார்கள், அதனால் தான் தாமதம் ஏற்படுகிறது, அரசாங்க இலாக்காவிலே தாமதம் இல்லே.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, அரிசன மக்களுக்கு மனைப்பட்டா வழங்குவதிலும் சரி, குடிசைகளிலே வாழ்கின்ற மக்களுக்கு மனைப்பட்டா வழங்குவதிலும் சரி பலவகையான சிக்கககள் இருப்பதால்தான் காலதாமதம் ஏற்படுகிறது என்று இந்த மன்றத்திலேயே பலமுறைகள் எடுத்துக் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த நிலைமையைப் பற்றி ஆராய ஒரு சர்வ கட்சிக் குழு ஏற்படுத்தி அவர்களுக்கு எல்லாம் சீக்கிரமாக மனைப்பட்டாக்கள் வழங்கக்கூடிய முறையைக் கொண்டுவர அரசிற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரிசனங்களுக்கு நிலம் வழங்கப் படுவதிலே—அவர்கள் குடியிருக்கின்ற பகுதிகளிலே ஜனத் தொகை நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வந்து இட நெருக்கடி ஏற்பட்டு விடுகிறது—அவர்கள் இருக்கின்ற இடங்களுக்கு அருகாமையிலே நிலத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள், சில இடங்களைப்

பொறுத்தவரையில் அருகாமையிலே இடம் கிடைக்கிறது. ஆகவே வழங்கப் படுகிறது. ஆனால் சில இடங்களிலே அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக சற்றுத் தொலைவிலேதான் இடம் கிடைக்கிறது. அப்படிப்பட்ட இடங்களிலே நிலம் கொடுத்தால் அவர்கள் அந்த இடங்களுக்குச் செல்ல மறுக்கிறார்கள். அருகாமையிலோ தொலைவிலோ இடங்களை எடுத்துக் கொடுக்க நான் முன்வாந்தாலும்கூட நிலச் சொந்தக்காரர்கள் எதிர்க் கிறார்கள், சிலர் வழக்கு மன்றங்களுக்குச் செல்கிறார்கள்.

நஞ்சை நிலங்களை நாம் கொடுப்பதில்லை, ஏனென்றால் அதை யெடுத்துக் கொடுத்தால் அதனால் உணவு உற்பத்தி தடைபடுமோ என்று எண்ணி அதை எடுத்துக் கொடுப்பதில் யோசனை செய்ய வேண்டி இருக்கிறது. நஞ்சை நிலத்தை எடுத்தாலும் கூட 2 சென்ட்களுக்கு உட்பட்டுத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. இவ்வளவு சிக்கல்கள் இருப்பதால்தான் தாமதம் ஏற்படுகிறது.

ஆகவே, இதற்காக என்று தனியாக ஒரு குழு அமைக்கவேண்டிய அவசியம் இல்லை. இந்த இலாகா மூலமாகவே பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, சர்க்கார் புறம் போக்கு நிலங்களாக இருந்தால் சீக்கிரமாகக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். சர்க்கார் புறம்போக்கு நிலங்கள் சர்க்கார் தீர்வை கட்டி தரிசாக இருக்கிற நிலங்கள் இவையெல்லாம் அரிசன மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றால் அரிசன நலத்துறையிலிருந்து ரெவின்யூ இலாகாவிற்கு பேப்பர்கள் மாறிமாறிப் போய்க்கொண்டே 7 ஆண்டுகள்கூட ஆகிவிடுகின்றன. ஆகவே, அந்த நிலைமையில்லாமல் மனுச்செய்த நாளிலிருந்து ஒரு ஆண்டுகுள்ளாக வழங்கப்பட வேண்டுமென்று ஒரு திட்டவட்டமான உத்திரவைப் போடுவதற்கு அரசு முன்வருலாமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு உத்திரவு பிறபிக்கப்பட்டிருக்கிறது. 1960ஆம் ஆண்டிற்கு முன்னால் அரசாங்க புறம்போக்கு நிலங்களில் குடியமர்த்தப்பட்டிருந் தால் அந்த நிலங்களை அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கவேண்டு மென்று இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட நிலங்கள் வேறு இலாக்காக் களுக்குத் தேவைப்பட்டால், போக்குவரத்துத் துறை போன்ற துறை களுக்குத் தேவைப்பட்டால், அப்படிப்பட்ட நிலங்களை பட்டா செய்து கொடுக்கமுடியாது. நீண்டகாலமாக இருந்தால் அந்த நிலங்களை அவர் கள் தேவையென்று கேட்டால் 1960ஆம் ஆண்டுக்கு முன்னாலிருந்து அரிசன மக்கள் அங்கே குடியிருந்துகொண்டிருந்தால் அவர்களுக்கு பட்டா செய்து கொடுப்பதிலே தாமதம் இல்லை. ஆனால் அவர்கள் புதிய இடங்களாகக் கேட்டால் தாமதம் ஏற்படுகிறது, தாமதம் இருந் தால் அது பரிசீலனை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சர்க்காருக்குச் சொந்தமான புஞ்சை நிலங்களாக இருந்தால் உடன நடவடிக்கை எடுக்கப்படுகிறது.